DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பழனிச்சாமி | Father Name : திருமலைகுமரன் |
| Age : 39 | Village : அம்மையார்பட்டி |
| Taluk : | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25 Feb 2026 16:52

(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் அம்மையார்பட்டியில் குடியிருந்து வருகிறேன்.

2. கடந்த 22.04.2022ம் தேதி பகல் 11.30 மணிக்கு போலீசார் ஆஜர் எதிரி பழனிச்சாமி வீட்டு முன்பாக வைத்து விசாரணை செய்துகொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தில் படம் வரைந்தார்கள். பின்னர் அதற்கு சாட்சியாக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலீசார் சம்பவ இடத்தில் தயார் செய்த பார்வை மகஜர் இது தான். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

3. நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்வரி என்னுடைய அக்கா என்றால் சரிதான், பெரியப்பா மகள் ஆவார். சாட்சி திருமலை குமரன் என்னுடைய அப்பா என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக நான் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. என்னுடைய அப்பா காவல் நிலையத்திற்கு சென்றாரா என்று எனக்கு தெரியாது. என்னுடைய வீடு இந்த வழக்கு எதிரி பழனிச்சாமியின் வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி இருக்கிறது என்றால் இரண்டு வீடு தள்ளி இருக்கிறது. இந்த வழக்கில் தயார் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் என்னுடைய வீடு காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். எதிரி பழனிச்சாமியின் வீடு கிழக்கு பார்த்த வீடு ஆகும்.

4. இந்த வழக்கின் புகார்தாரர் என்னுடைய அக்கா என்பதால், காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்ட பார்வை மேனேஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, என்னுடைய அக்காவிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

25 Feb 2026 16:57

Judicial Magistrate 2, Sattur